

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.1.2025) சென்னை, அண்ணா நகர், கோபுரப் பூங்காவில் நடை பெற்ற "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது திருமதி.சாந்தா ஸ்டாலின், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, ஆ.இராசா எம்.பி., இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், ஆ. தமிழரசி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.1.2025) சென்னை, அண்ணா நகர், கோபுரப் பூங்காவில் நடைபெற்ற "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சியை பார்வையிட்டு, விழுப்புரம் "கை கொடுக்கும் கை" குழுவினரின் மல்லர் கம்பம் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட கலைஞர்களுக்கும், பம்பை இசை குழுவினருக்கும் சிறப்பு செய்தார்கள். இந்நிகழ்வின்போது வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, ஆ.இராசா எம்.பி., இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், திருமதி ஆ. தமிழரசி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே. சிற்றரசு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.1.2025) சென்னை, அண்ணா நகர், கோபுரப் பூங்காவில் நடை பெற்ற "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது திருமதி.சாந்தா ஸ்டாலின், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், ஆ. தமிழரசி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## 'சென்னை சங்கமம் 2025 – நம்ம ஊரு திருவிழா'!

# கலைஞர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்த முதல்வர்!

சென்னை,ஜன.19-

'சென்னை சங்கமம் 2025 - நம்ம ஊரு திருவிழாவின்' இறுதி நாளான 17.01.2025 அன்று சென்னை, அண்ணா நகர், கோபுரப் பூங்காவில் நடைபெற்ற "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா" கலை நிகழ்ச்சியை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு, விழுப்புரம் "கை கொடுக்கும் கை" குழுவினரின் மல்லர் கம்பம் நிகழ்ச்சியில் பங்கேற்ற மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட கலைஞர்களுக்கும், பம்பை இசை குழுவினருக்கும் சிறப்பு செய்தார். நாட்டுப்புற கலைஞர்களுக்கு பொன்னாடை அணிவித்து பாராட்டி கௌரவித்து, முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற கழக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.



இந்நிகழ்வின்போது, திருமதி.சாந்தா ஸ்டாலின், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், வனத்துறை அமைச்சருமான க. பொன்முடி, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி., இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சென்னை வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், தமிழரசி ரவிக்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே. சிற்றரசு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.1.2025) முகாம் அலுவலகத்தில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தமது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## இந்தியாவில் முதல் முறையாக

# சென்னையில் இரவு நேர கார் பந்தயம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு நடிகர் அஜித் குமார் நன்றி!


துபாய்,ஜன.19-

நடிகர் அஜித் குமார் 'அஜித் குமார் ரேசிங்' (Ajith Kumar Racing) என்ற பெயரில் தமது தலைமையில் ஓர் அணியை உருவாக்கியுள்ளார். இந்த அணி ஜனவரி 12ஆம் தேதி துபாயில் நடைபெற்ற '24H Dubai 2025' சர்வதேச கார் பந்தயத்தில் பங்கேற்று மூன்றாவது இடம் பிடித்து வெற்றி பெற்றது. இது அஜித் ரசிகர்களுக்கிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

இந்த வெற்றியை அஜித் குமார் இந்தியக் கொடியுடன் கொண்டாடிய சம்பவம் ரசிகர்களுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்லாது, அவரது மகன், மகள் மற்றும் மனைவி ஷாலினியுடன் அவர் இருந்த வீடியோ காட்சிகள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

தமிழ்நாடு அரசுக்கு நன்றி:

இந்த நிலையில், அஜித் குமார் தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து நேர்காகாணல் ஒன்றிற்கு பேட்டியளித்த அஜித் குமார், **"தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக, சென்னையில் முதல் முறையாக கார் பந்தயம் நடைபெற்றுள்ளது. அதுவும் அவை இரவுநேர போட்டியாக நடந்துள்ளது. இத்தகைய கார் பந்தயத்தை நடத்தி சாத்தியப்படுத்திய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு நன்றி.**

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சுவிட்சர்லாந்தில் நாளை தொடங்கும்

# உலகப் பொருளாதார மாநாட்டில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்கிறார்!

## முதலீட்டாளர்களை சந்திக்கவும் திட்டம்!

*சென்னை, ஜன.19-*

உலகப் பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூட்டம் வரும் ஜனவரி 20 முதல் 24ம் தேதி வரை சுவிட்சர்லாந்து நாட்டில் உள்ள டாவோஸ்க்ளோஸ்டர்ஸ் நகரில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில், தமிழ்நாடு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் அரசு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில்துறை தலைவர்களும் இதில் பங்கேற்க உள்ளதால், அவர்களுடன் 50 கூட்டங்களை நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. அந்த வகையில், மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய பிராந்திய நாடுகளை சேர்ந்த தொழில் முனைவோர் களை சந்திப்பதுடன், ஐரோப்பியாவில் உள்ள தமிழ் தொழில் முனைவோர்களையும் தமிழக அரசு குழுவினர் சந்திக்க உள்ளனர்.

உலக முதலீட்டாளர்களுடன் உறவுகளை மேம்படுத்துதல், மின்சார வாகனங்கள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையில் தமிழகத்தின் திறனை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லுதல், வளர்ந்து வரும் உலகளாவிய திறன் மைய துறையில், தகவல் தொழில்நுட்பம் சேவை துறைகளை மேம்படுத்துதல், மெட்டெக், ஹெல்த்கேர், உணவு பதப்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய புதிய துறையில் முதலீடுகளை விரிவுபடுத்துதல் உள்ளிட்டவை ஆலோசிக்கப்பட உள்ளது.

இந்த ஆலோசனையின் போது, "தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வர வேண்டும் என்று பல்வேறு நாட்டு முதலீட்டாளர்களை சந்தித்து பேசவும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா திட்டமிட்டுள்ளார். 'நுண்ணறிவு கலத்திற்கான ஒருங்கிணைப்பு' என்ற தலைப்பில் நடைபெற உள்ள அமர்வில் ஒன்றிய அரசு மற்றும் மாநிலங்களின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்ட குழுவுடன் தமிழ்நாடு அரசு குழுவும் கலந்து கொள்கிறது. இந்த குழுவில் ஆந்திரம், மராட்டியம், தெலங்கானா, தமிழ்நாடு, உத்தர பிரதேசம் மற்றும் கேரளா ஆகிய 6 இந்திய மாநிலங்களின் உயர்மட்ட பிரதிநிதிகள் பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.

**வளர்ச்சியில் முன்னேறி பாயும் தமிழ்நாடு**

தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கூறும்போது, "டாவோஸ் மாநாட்டில் 'வளர்ச்சியில் முன்னேறி பாயும் தமிழ்நாடு' என்ற முழக்கத்துடன் முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டுள்ளோம். மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த நிறுவனங்களுடன் தமிழ்நாட்டு அதிகாரிகள் பேச்சு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சிறப்பாக தொழில் செய்து வரும் நிறுவனங்கள், தொழில்துறை தலைவர்களையும் முன்னிறுத்தி முதலீடுகளை ஈர்க்க முயற்சி செய்கிறோம். தமிழ்நாட்டின் சாதன அம்சங்களை உலகப் பொருளாதார மாநாட்டில் முன்னிறுத்தி முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

## டெல்லியில் பனிமூட்டம்:

# 130 விமானங்கள், 27 ரயில்கள் தாமதம்!

*டெல்லி, ஜன.19-*

டெல்லியில் அடர்ந்த பனிமூட்டம் தொடர்கிறது. இதனால் 130 விமானங்கள் மற்றும் 27 ரயில்கள் நேற்று முன்தினம் தாமதமாக இயக்கப்பட்டன.

தலைநகர் டெல்லியில் எதிரே வரும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு அடர்ந்த பனிமூட்டம் தொடர்கிறது. இதனால் ரயில் மற்றும் விமான சேவை பாதிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் காலை 130 விமானங்கள் தாமதமாக இயக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுபோல் நேற்று முன்தினம் டெல்லிக்கு 27 ரயில்கள் தாமதமாக வந்ததாக அதிகாரிகள் கூறினர். இதற்கிடையில் டெல்லியில் நேற்று முன்தினம் காலை காற்றின் தரக்குறியீடு 294 (மோசம்) ஆக இருந்தது.

டெல்லியில் காற்றின் தரக்குறியீடு கடந்த ஆண்டு தீபாவளி பண்டிகைக்கு பிறகு மிக மோசமான அளவுக்கு சென்றதால் கிராப் 4 கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அப்போது முதல் டெல்லியில் கிராப் 3 அல்லது கிராப் 4 கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதும் வாபஸ் பெறப்படுவதுமாக உள்ளது.